විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය
எனது இல.
My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் : 07/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ..........................

දිනය
திகதி
Date } 2023.11.30

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்

அனைத்து பிரதேச செயலாளர்கள்

## ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ் - 2024

இலங்கையின் ஓய்வூதிய சமூகத்தினரின் ஓய்வூதியத்தை இடையூறு இன்றி வழங்குவதற்காக, 2024 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழைப் பெறுவதற்கு பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**02. (அ) விரல் அடையாளத்தால் உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்குதல்.**

i. அதன்படி, 2016.01.01 ஆம் திகதிக்குப் பின் ஓய்வுபெற்று, தங்கள் உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாளத்தால் உறுதிசெய்ய பதிவு செய்துள்ள அனைத்து ஓய்வூதியர்களும் உரிய முறையில் தங்களின் உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் ஓய்வூதியர் அவர் உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாளத்தின் மூலம் இற்றைப்படுத்த பதிவு செய்திருக்கிறாரா என்பதை பின்வரும் முறையில் சரிபார்க்கலாம்.

www.pensions.gov.lk → Public Services → Digital Life Certificate Information

ii. ஓய்வூதியர் இன்னும் வாழ்கிறார் என்பதை உறுதிப்படுத்தும் வசதி 26 பிரதேச செயலகங்களிலும், 6 தனியார் மற்றும் அரச வங்கிகளின் 476 கிளைகளிலும் செய்யப்பட்டுள்ளது. அத்தகைய இடங்களின் பெயர் பட்டியலை பின்வரும் விதமாக மூன்று மொழிகளிலும் பதிவிறக்கம் செய்யலாம்.

www.pensions.gov.lk → Resources → Downloads → Life Certificate -2023 through Finger Prints from 01.01.2023

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

iii. பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஓய்வூதிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அப் பிரதேச செயலகத்திற்கு தமது உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்க வரும் ஓய்வூதியர்களுக்கு இந்த வசதியை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

iv. உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாளமாக சமர்ப்பிக்க பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் கிராம அலுவலரிடம் சென்றால், அவர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாள வடிவில் பெறுவதற்கான வசதி வழங்கப்பட்ட வங்கியின் கிளைக்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ அவர்களை அனுப்பி வைக்குமாறு கிராம அலுவலருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

**(ஆ) கிராம உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட இணைப்பு 01 மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்குதல்.**

i. மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வூதியர்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட இணைப்பு 01 இன் படி அவர்களது உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ii. அத்தகைய சந்தர்ப்பங்களில், ஊனம், நோய் அல்லது வேறு ஏதேனும் காரணங்களால், தனது நிரந்தர வசிப்பிடமான கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து விலகி வசிக்கும் போது, உயிர்வாழ்ச் சான்றிதழிற்கு சம்பந்தப்பட்ட ஓய்வூதியரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் உயிர்வாழ்ச் சான்றிதழ் மேலும் ஓய்வூதியர் தற்காலிகமாக வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரால் மேலொப்பமிட்ட பின்னர், அவரது ஓய்வூதியக் கோவை பராமரிக்கப்படும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இவ்வாறான எழுத்துமூல உறுதிப்படுத்தல் பிரதேச செயலகத்தால் பெறப்பட்டவுடன், ஓய்வூதிய விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர் ஓய்வூதியரின் உயிர்வாழ் சான்றிதழைப் இற்றைப்படுத்த வேண்டும்.

iii. HAF-2/15 CORDI/1507-(SUB 1) ஆம் இலக்க 2019.11.06 ஆம் திகதி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், துறவி அல்லது கன்னியாஸ்திரி வசிக்கும் விஹாரை/ ஆராமை/ ஆரணியத்திற்கு செல்வதன் மூலம் மதகுருமார்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ்களைப் பெற கிராம சேவையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

iv. ஊனமுற்றோர் அல்லது முதியோர் அந்நிலமை காரணமாக அவர்களது இல்லங்களிலோ அல்லது முதியோர் இல்லங்களிலோ தங்கியிருக்கும் ஓய்வூதியர்கள் மற்றும் அனாதைகளின் உயிர்வாழ்ச் சான்றிதழை அந்த இடத்திற்குச் சென்று சரிபார்க்க வேண்டும். ஓய்வூதியருக்கு ஒரு பாதுகாவலர் நியமிக்கப்பட்டிருந்தாலும், ஓய்வூதியர் இணைப்பு 01 மாதிரியில் கையெழுத்திட வேண்டும். அவர் படிவத்தில் கையொப்பமிட முடியாவிட்டால் மட்டுமே, அத்தகைய ஓய்வூதியரால் விரல் அடையாளத்தை வைக்க முடியும்.

03. உயிர்வாழ்ச் சான்றிதழ்களின் தரவுதளவு முறைமை 2024.03.31 ஆம் திகதிக்கு முன் இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதால், இது தொடர்பில் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்க பின்வரும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

i. சம்பந்தப்பட்ட ஓய்வூதியரால் கையொப்பமிடப்பட்ட பின்னர், கிராம உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட்ட இணைப்பு 01 இல் உள்ள படிவம் 2024.02.15 ஆம் திகதி பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஓய்வூதியப் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் மேற்கண்ட முறையில் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தரவு தள முறைமையை இற்றைப்படுத்தி, பின்னர் 2024.02.20 அன்று தங்கள் உயிர்வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்த கையொப்பமிடாத ஓய்வூதியர்களின் பட்டியலை சம்பந்தப்பட்ட கிராம அலுவலரிடம் திருப்பி அனுப்ப வேண்டும். கிராம அலுவலர் ஆவணத்தை பூர்த்தி செய்து 2024.03.31 அன்று பிரதேச செயலாளரிடம் கையளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ii. ஓய்வூதியர் கிராம அலுவலர் முன்னிலையில் கையொப்பமிடத் தவறினால், ஓய்வூதியருக்காக ஒதுக்கப்பட்ட கையொப்பமிடும் இடத்தை நீக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும், இதனால் அவர்கள் பின்னர் கையொப்பமிடுவதற்கு எந்த வாய்ப்பையும் ஏற்படுத்தக்கூடாது.

iii. 2024.03.31 இல் தங்கள் உயிர்வாழ்ச் சான்றிதழைப் இற்றைப்படுத்த தவறியவர்களின் ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்படுகின்றது என்பதை ஓய்வூதியர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஒப்பம்

ஏ. ஜகத் டி. டயஸ்

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த

இணைப்பு 01

**07/2023 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதத்துடன் வழங்கப்படும் படிவம்**

**உயிர்வாழ்ச் சான்றிதழை இற்றைப்படுத்தல் 2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | | பிரதேச செயலாளர் பிரிவு | | கி. சே பிரிவும் இலக்கமும் | |

| 01. ஓய்வூதியரின் பெயர் | 02. ஓய்வூதிய இலக்கம் (வகை/இல) | 03. தே.அ.அ இல. | 04. தொடர்பு இல. | 05. கையொப்பம் | 06. வேறு |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |
| 13. | | | | | |
| 14. | | | | | |
| 15. | | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள ஓய்வூதியர்கள் எனது முன்னிலையில் படிவத்தில் கையொப்பமிட்டுள்ளனர் என இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

................................ ..............................................................................

திகதி கிராம உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை